DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.757 / 2022 |
| Depostition of witness for | Prosecution wit. PW.10 |
| Name | திரு. அனந்தமுத்துராமன் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | உதவி ஆய்வாளர், தூத்துக்குடி தென் பாக காவல் நிலையம். |
| Religion | |
| Age | |

<u>(2,3,4 எதிரிகள் ஆஜர் – 1 ஆம் எதிரி ஆஜரில்லை: 1 ஆம் எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )</u>

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 11-06-2026.(நேரம்: 12.20PM )**

**<u>முதல்விசாரணை</u>**

1. நான் தற்போது தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள தென்பாக காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன்.

2. இதற்கு முன்பாக செய்துங்கநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நான் பணியில் இருந்தபோது கடந்த 08.06.2022 ஆம் தேதி 18.30 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது நான் ஏற்கனவே 05.06.2022 ஆம் தேதி 21.30 மணிக்கு பதிவு செய்து வைத்திருந்த நிலைய மனு ரசீது எண் 197/2022 ஐ பார்வையிட்டு பரிசிலனை செய்ததில் பிடிக்கக்கூடிய குற்றம் என புலனாகியதால் மேற்படி மனுவில் கண்டுள்ள புகார் வாக்குமூலத்தின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 82/2022 சட்டபிரிவுகள் 147,294(பி),323,506(2) இதச மற்றும் 4 of TNPHW Act ஆக வழக்கு பதிவு செய்தேன். அந்த அசல் முதல் தகவல் அறிக்கையும் புகார்

வாக்குமூலத்தையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் ஸ்ரீவைகுண்டம் அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை எனது விசாரணைக்கு வேண்டியும் வைத்து கொண்டேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 5 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

3.பின்பு வழக்கு கோப்பை எடுத்துக்கொண்டு நான் 08.06.2022 ஆம் தேதி 20.00 மணிக்கு வழக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் லட்சுமணன் மற்றும் சுடலைமணி ஆகியோர்கள் முன்னிலையில் வழக்கு சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறத்தையும் சாட்சிகள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அசாஆ 6,7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பின்பு சாட்சிகள் பேச்சியம்மாள், முத்தாம்மாள், சங்கரையா, ராஜாமணி, வேல்கனி, சுப்புதாய் , சுடலைமணி , லட்சுமணன், மற்றும் SSI திரு கண்ணையா ஆகியோர்களை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

5.பின்பு சம்பவத்தை விசாரணை செய்ததன் அடிப்படையிலும் சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையிலும் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரிகளை கைது செய்ய சென்றபோது மேற்படி எதிரிகள் தூத்துக்குடி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் சிஆர்எம்பி எண் 4457/26 பிராகாரம் முன்ஜாமின் பெற்றதால்கைது செய்ய இயலவில்லை.

6. இவ்வழக்கில் காயம்ப்பட்ட சாட்சி பேச்சியம்மாள் என்பவருக்கு சிகிச்சை அளித்த ஸ்ரீவைகுண்டம் அரசுமருத்துவர் திருமதி ரேஷ்மா என்பவரை விசாரித்து காய சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த காய சான்று அசாஆ 8 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.(குவிமுச 294(3) ன் படி)**

7.இவ்வழக்கில் காயம்ப்பட்ட சாட்சி முத்தம்மாள் என்பவருக்கு சிகிச்சை அளித்த TVMCH அரசுமருத்துவர் திருமதி பத்மா என்பவரை விசாரித்து காய சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன்.

8. பின்பு இவ்வழக்கின் சட்டபிரிவான 147,294(பி),323,506(2) இதச மற்றும் 4 of TNPHW Act லிருந்து சட்டபிரிவு 294(பி),323,506(2),326 இதச மற்றும் 4 of TNPHW Act ஆக மாற்றம் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.**அந்த சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ 9 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

9. இ,த்துடன் என்னுடைய விசாரணையை முடித்து 24.08.2022 ஆம் தேதி இவ்வழக்கின் 1 முதல் 4 வரையுள்ள எதிரிகள் மீது

294(பி),323,506(2),326 இதச மற்றும் 4 of TNPHW Act ஆக குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை (நேரம் 12.30PM)**

1. 1ஆம் எதிரி சுடலைமணி கொடுத்த புகாரில் 8 பேர்கள் மீது வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. பார்வைமகஜரில் கையொப்பம் செய்த நபர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக நாங்கள் விசாரித்தோமா என்றால் ஆம் விசாரித்தோம்.

3. பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவை அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

4. சாட்சிகளை ஒருதலை பட்சமாக விசாரணை செய்து அதன் அடிப்படையில் குற்ற இறுதி அறிக்கை தவறான முறையில் தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

5.வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

6. சொன்னநேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

ஒ/ம் ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.